

கழக இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் எழுதியுள்ள 'தளபதி ஓர் அன்பாலயம்', 'அக்னி அம்புகள்', 'திராவிடத் தலைவர்களின் மனிதநேயம்', 'கண்டேன் கலைஞரை', 'கன்னித் தமிழ் கவிதை மழை' ஆகிய ஐந்து புத்தகங்களையும் அண்ணா அறிவாலயத்தில் தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்கள். அப்போது கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தித்தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தஞ்சாவூர் தெற்கு மாவட்ட கழக இலக்கிய அணித் துணைத்தலைவர் சி.தனபால், சென்பாக பதிப்பகம் மணிகண்டன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



துறைமுகம் தொகுதியில் அன்னை தயாளு அம்மாள் தொண்டு அறக்கட்டளை சார்பில் மாணவர்களுக்கு இலவச கணினி பயிற்சியும் பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன. பயிற்சி தொடக்க விழா நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ் குமார், ஆணையர் குமரகுருபரன், மண்டலக் குழுத் தலைவர் ஸ்ரீராம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

போலி பேராசிரியர்கள் நியமனம்!

# தவறு செய்திருந்தால் கடும் நடவடிக்கை!

## அமைச்சர் க.பொன்முடி எச்சரிக்கை!

சென்னை, ஆக. 25 -

தமிழகத்தில் போலி பேராசிரியர்கள் நியமனம் தொடர்பாக குழு அமைத்து விசாரணை நடத்தி யார் தவறு செய்திருந்தாலும் அவர்கள் மீது திமுக அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் அமைச்சர் பொன்முடி பேட்டியளித்துள்ளார்.



சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள எம் சி சி பள்ளியில் கல்வி மேம்பாட்டிற்கான கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது. இந்த கருத்தரங்கில் உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி, பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், வில்சன் எம்.பி. ஆகியோர் சிறப்பு விருந்தி னராக கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினர்.

**அமைச்சர் மனோ தங்கராஜ் பேச்சு**

சிறுபான்மையினர் பள்ளிகளுக்கு நிகழ்ச்சி நடத்த வேண்டும் என கோரிக்கை வைத்தனர். தமிழ்நாட்டில் சிறுபான்மையினர் மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்கு காரணம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் தான். கல்வி நிறுவனங்களும் அவைகள் சந்தித்து வரும் பிரச்சனைகள் குறித்தும் அமைச்சர் பொன்முடிகது நன்றாக தெரியும் என்பதால் நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டார்.

கல்வி முற்றிலுமாக மறுக்கப்பட்ட சமுகத்தில் வாழ்ந்து கொண்டிருந்தோம். அந்நிலையை போக்கும் ஆயுதமாக மீண்டும் கல்வி பிறந்தது. குறிப்பாக 17 சதவீதம் கிறிஸ்துவர்கள் உயர்ந்த பொறுப்பில் இருந்த நிலையில் தற்போது 1 சதவீதம் தான் உள்ளார்கள் என்பதை உற்று கவனிக்க வேண்டியது.

மேலும் மற்ற ஒரு சமூகம் சதவிதத்தில் இருந்து 70 சதவீதம் உயர்ந்துள்ளது. பொதுவான உரிமை சிறுபான்மை மக்களுக்கு மறுக்கப்படுகிறது. தனியாக வழங்கப்பட்ட உரிமைகளிலும் பிரச்சினை உள்ளது. இந்த இரண்டாம் நிலை சிறுபான்மை மக்களுக்கு இல்லை என்பது என் கருத்து. எல்லோரும் சமம் என்ற தன்மை வர வேண்டும். இது நமக்கான அச்சுறுத்தல் இல்லை; தேசத்திற்கான அச்சுறுத்தல் இதற்கான விழிப்புணர்வு வேண்டும் என்று அமைச்சர் மனோ தங்கராஜ் கூறினார்.

**அமைச்சர் பொன்முடி**

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் க.பொன்முடி பேசியதாவது:

தமிழகத்தை பொறுத்தவரையில் அதிக அளவில் ஏற்றத்தாழ்வை நீக்கி பொதுமக்களுக்கு கல்வி கொடுத்ததில் கிறிஸ்தவ மிஷனரிகளுக்கு பெரும் பங்கு உள்ளது. குறிப்பாக அன்றைய காலகட்டத்தில் திருநெல்வேலி கன்னியாகுமரி போன்ற பகுதிகளில் சேர்ந்தவர்களே அதிக அளவில் கல்வி பயின்றவர்களாக இருந்தார்கள். அதற்கு மிக முக்கிய காரணம் அங்கு இருந்த கிறிஸ்தவ மிஷனரிகளே.

இதன் காரணமாக தான் முத்தமிழர் கலைஞர் அவரது ஆட்சி காலத்தில் சிறுபான்மையினர் வாரியம் என்கின்ற ஒன்றை அமைத்தார். அதன் காரணமாக பல சிறுபான்மையினர் பெருமளவில் பயனடைந்தார்கள். குறிப்பாக திராவிட மாடல் தமிழ்நாடு அரசு சார்பில் சிறுபான்மை யினருக்கான பல்வேறு நலத்திட்டங்களையும் தொலைநோக்கு திட்டங்களையும் நமது முதல்வர் கொடுத்து உள்ளார். இதன் பெயர் தான் திராவிட மாடல் ஆட்சியாகும்.

பள்ளிகளின் தரத்தை உயர்த்த வேண்டும் என்றால் அவர்கள் படிக்கும் பொழுது பலதரப்பட்ட தரவுகளை உள்வாங்க கூடிய அளவில் ஒரு சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சிறப்பாக அப்படிப்பட்ட ஒன்று தான் தமிழ்நாடு அரசால் முதல் அமைச்சரின் பெயரால் கொண்டுவரப்பட்ட நான் முதல்வன் திட்டம். குறிப்பாக இளைஞர் திறன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி அவர்கள் தான் தற்பொழுது நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அனைத்து இளைஞர்களையும் பலதரப்பட்ட தரவுகளையும் உள்ளடக்கி அளிக்கக்கூடிய நான் முதல்வன் பயிற்சியின் மூலம் தேர்ச்சி பெற செய்து வருகிறார்.

நாங்கள் சிறு வயதில் பள்ளியில் பயிலும் பொழுது மதிய உணவு கேட்டாலே எங்கள் பெற்றோர்கள் வேலைக்குச் செல்ல வேண்டும் என கூறி சென்று விடுவார்கள். ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றி காலை சிற்றுண்டிகையே ஆரம்பப் பள்ளிகளில் தர வைத்தவர் தான் நமது முதல்வர். அன்றைய காலகட்டத்தில் நாங்கள் அனைவரும் விடுதியில் தங்கி கல்லூரி படிப்பது என்பது மிகவும் சிரமமான ஒன்று. ஏனெனில் அந்த அளவிற்கு யாருக்கும் வருமானம் இருந்தது கிடையாது இதை நன்கு உணர்ந்த நமது முதல்வர் புது மைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் என்கின்ற பெயரில் மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையாக அரசு உதவி பெறும் பள்ளிகளின் படிக்க எழுத அவைகளுக்கும் மாணவிகளுக்கும் அறிவித்து வழங்கி வருகிறார்.

இந்தியாவைப் பொறுத்த வரையில் வேற்றுமையில் ஒற்றுமை பல்வேறு வேற்றுமைகள் இருந்தாலும் சமத்துவம் என்கின்ற ஒன்றை அடையும்வரை அனைவருக்கும் சலுகைகளை கொடுத்தாக தான் வேண்டும். சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் கூறியதை போல இங்கு ஜாதி பெயரைத் தூரி பல வேற்றுமைகள் உள்ளது. அதனை ஒழிக்க தான் வேண்டும். பிற்படுத்தப்பட்டவர் மற்றும் மிகவும் பிற்படுத்த ப்பட்டோர் என்கின்ற துறை மட்டும் இருந்த வேளையில் அவற்றுடன் சிறுபான்மையினர் துறையும் சேர்த்தவர் தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர். சிறுபான்மைக்காக அதிக அளவில் உழைத்த அரசு தான் திராவிட மாடல் அரசு என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

இவ்வாறு அமைச்சர் க. பொன்முடி பேசினார்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து அமைச்சர் பொன்முடி கூறுகையில்,

சிறுபான்மையின பள்ளியில் பயில்கின்ற மாணவ மாணவிகளுக்கு இன்று நான் முதல்வன் திட்டம் எல்லா இடத்திலும் அமல்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக புதுமைப்பெண் திட்டத்தின் மூலமாக சிறுபான்மையின பள்ளிகளிலே படிக்கின்ற மாணவ மாணவிகளுக்கும் உயர்கல்விக்கு சென்றால் அவர்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிப்பையும் தமிழக முதல்வர்கள் அறிவித்து அதையும் பயன்படுத்திக் கொண்டிருகிறார்.

இந்தியாவிலேயே கல்வி வளர்ச்சிக்கு முன்னோடி மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. பள்ளி கல்லூரிகளுக்கு அருகில் போதைப்பொருள் விற்பனை செய்தால் கடுமையான தண்டனை வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

போதை கலச்சாரம் ஒழிக்கப்பட வேண்டும் என முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். போலி பேராசிரியர்கள் நியமனம் தொடர்பாக குழு அமைத்து விசாரணை மேற்கொண்டு வருகிறோம். யார் தவறு செய்திருந்தாலும் அவர்களை இந்த அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மனோ தங்கராஜ் கூறுகையில்,

தமிழக முதல்வர் பல சமூகங்களை ஒன்றிணைத்து அவற்றின் முன்னேற்றத்தி ற்காகவும் சமத்துவத்திற்காகவும் அரும் பாடு பட்டு வருகிறார். இதன் காரணமாக தான் சமத்துவ வழியில் பெண்கள் , விளிம்பு நிலை மக்கள் என அனைவரும் முன்னேற்றத்தை அடைந்து வருகிறார்கள்.

குறிப்பாக கல்விலும் வேலை வாய்ப்பிலும் யாருக்கும் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு ஒரு முன்னேற்றம் தொடர்ந்து தமிழக அரசு மேற்கொண்ட பல திட்டங்களின் வாயிலாக வளர்ச்சி அடைந்து வருகிறார்கள். இதன் காரணமாக தான் இன்னும் நூறாண்டு காலங்கள் கூட திராவிட அரசியல் இந்த மண்ணில் இருக்க வேண்டிய அவசியம் தேவை இருக்கிறது.

நானும் முத்தமிழ் அறிஞர் கலைஞரும் பல மேடைகளில் பெருமைப்படுத்தி மேடைகளில் பேசியுள்ளோம். திமுக அரசு பெருந்தலைவர் காமராஜரை புறக்கணித்து பேசுகிறது என்பது மிகவும் ஒரு தவறான கருத்து. பல உலக நாடுகளுக்கு சென்று வந்துள்ளேன் . அதன் அடிப்படையில் தான் இந்தியாவில் மட்டும் தான் சாதி ரீதியில் பல வன்முறைகள் பல புறக்கணிப்புகள் நடைபெற்று வருகிறது என குறிப்பிட்டுள்ளேன்.

வட மாநிலங்களில் காந்தியத்தை அடிப்படையாகக் கொண்டு பல வன்முறைகள் அதிக அளவில் நடைபெற்று உள்ளது . ஆனால் தமிழகத்தில் அவை இல்லை என்றால் அதற்கு திராவிட மாடல் அரசு தான் காரணம் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மனோதங்கராஜ் கூறினார்.

# பள்ளத்தூரில் ரூ.29 லட்சத்தில் புதிய மருத்துவ கட்டிடம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் திறந்து வைத்தார்!

*சிவகங்கை, ஆக. 25 -*

சிவகங்கை மாவட்டம் பள்ளத்தூரில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூபாய் 28 லட்சத்து 50 ஆயிரம் சார்பில் அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவ கட்டிடம் மற்றும் ஆராய்ச்சி மையத் திறப்பு விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசாஅஜித் தலைமையில் நடைபெற்றது. புதிய கட்டிடத்தை திறந்து வைத்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் சிறப்புரை ஆற்றினார் .

இந்த நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ் .ரவி, ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.ஆர்.ஆனந்த், சுப. சின்னத் துரை, பேருர்கழக செயலாளர் அசோக், முருகப்பன், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி சாந்தி, சுகாதார துறை இணை இயக்குனர் பொறுப்பு பிரிய தர்ஷினி, வள்ளியம்மை ஆச்சி குடும்பத்தினர் ஜவகர் குடும்பத்தினர், நாச்சியப்பன் குடும்பத்தினர், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராம. ருக் மணி, பேரூராட்சி வார்டு கவுன்சிலர் சோலைமலை, ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், மருத்துவர் வள்ளியம்மை உள்பட பொதுமக்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். இந்த மருத்துவமனைக்குஆய்வகம் மற்றும் உபகரணங்கள்வாங்க அரசின்சார்பில் ரூபாய் 6லட்சமும்,,வள்ளியம்மை ஆச்சி சார்பில் ரூபாய் 3 லட்சமும் கட்டிடத்திற்கு அரசின் பங்காக ரூபாய் 11லட்சமும், கட்டிடத்திற்கு அருண் சாரிட்டபிள் டிரஸ்ட் மூலம் ரூபாய் 6 லட்சமும், பேவர் பிளாக், சாய்தளம் மற்றும் பல்வேறு பணிகளுக்காக 1. 50 லட்சமும், தோட்டம் மற்றும் பராமரிப்பிற்கு நாச்சியப்பன் குடும்பத்தினர் ரூபாய் 1லட்சம், நன்கொடையாக வழங்கி உள்ளார்கள்.

ரெயில்வே இடத்தில் குடியிருக்கும்

# வேலூர் வசந்தபுரம் மக்களுக்கு மாற்று இடம் வழங்க வேண்டும்!

## டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. பேட்டி

வேலூர், ஆக. 25 -

ரெயில்வே இடத்தில் குடியிருக்கும் வேலூர் வசந்தபுரம் மக்களுக்கு மாற்று இடம் வழங்க வேண்டும் என்று அதிகா ரிகளிடம் கோரிக்கை வைத்துள்ளதாக டி.எம். கதிர்ஆனந்த் எம்.பி.தெரி வித்தார்.



ஒருங்கிணைப்பு கூட்டம் வேலூர் மாவட்டத்தில் ரெயில்வே இருப்புபாதையை கடக்கும் சாலை தொடர் பான பல்வேறு பிரச்சினை கள் குறித்து ஒருங்கிணைப்பு கூட்டம் வேலூர் கலெக்டா அலுவலகத்தில் நேற்று நடந்தது. கலெக்டர் சுப்புலெட்சுமி தலைமை தாங்கினார். டி.எம். கதிர்ஆனந்த் எம்.பி., போலீஸ் சூப்பிரண்டு மதிவாணன், மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாவட்டத்தில் அனைத்து ரெயில்வே கேட்டையும் மூடி விட்டு மேம்பாலம் அல்லது சுரங்கப்பாதை அமைப்பது, வேலூர் வசந்தபுரத்தில் ரெயில்வே நிலங்களில் வசிக்கும் பொதுமக்கள் அங்கிருந்து வெளியேற கால அவகாசம் அளிப்பது அல்லது மாற்று இடம் வழங்குவது தொடர்பாக ஆலோசனை கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் கலெக்டரின் நேர் முக உதவியாளர் (பொது) முத்தையன், ரெயில்வேதுறை முதன்மை செயற்பொறியாளர் அருண், நிலஎடுப்பு மாவட்ட வருவாய் அலுவலர் ராஜ்குமார், மாநகராட்சி கமிஷனர் ஜானகி, துணை கலெக்டர் (பயிற்சி) ராஜி மற்றும் பல்வேறுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்துக்கு பின்னர் டி.எம்.கதிர்.ஆனந்த் எம்.பி. கூறுகையில், விழுப்புரம் திருப்பதி ரெயில்வே வழித்த டத்தை இரட்டை வழிப்பா தையாக்கும் திட்டம், வேலூர் கன்டோன்மென்ட் ரெயில் நிலையத்தை மேம்படுத்தும் திட்டத்துக்காக வேலூர் வசந்தபுரம் உள்ளிட்ட பகுதி களில் ரெயில்வே நிலங்களில் வசிக்கும் 600க்கும் மேற்பட்ட குடும்பங்களை அந்த இடத்தை காலி செய்யும்படி ஏற்கனவே ரெயில்வே நிர்வாகம் நோட்டீஸ் அளித்துள்ளது. அவர்களுக்கு மாற்று இடம் வழங்க வேண்டும். அதன்பின்னர் அங்கிருந்து காலி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுமக்கள் இடத்தை காலி செய்வதற்கு 2ஆண்டுகள் கால அவகாசம் வழங்கும்படி ரெயில்வே அதிகாரிகளிடம் அறிவுறுத்தி உள்ளேன்.

அந்த லிப்ட் வசதியுடன் மேம்பாலம் வேலூர் வசந்தபுரம் பகுதி யில் உள்ள ரெயில்வே ரெயில் வேகேட்டை மூடாமல் மேம் பாலம் கட்டவும், அங்கு லிப்ட் வசதி அமைக்கவும், இருசக்கர வாகனங்கள் சென் றுவர தனியாக இணைப்பு சாலை அமைத்திடவும் அறி வுறுத்தப்பட்டுள்ளது. காட்பாடியில் 2வது ரெயில்வே மேம்பாலம் அமைத்திட டெண்டர் விடப்பட்டுள்ளது.

விரைவில் அந்த பணிகள் தொடங்கப்படும். வாணியம்பாடி டவுன் ரெயில்வேகேட் பகுதியில் மத் திய, மாநில அரசுகள் இணைந்து 2 சுரங்கப்பாதை அமைத்துத்தர உறுதியளித்துள்ளது. இந்தியாவில் திறக்கப்படும் நிலையில் உள்ள விமான நிலையங்களில் முதலாவதாக வேலூர் விமான நிலையம் பயன்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இளையான்குடி ஒன்றியம்

# சாலைக்கிராமத்தில் ரூ.30 லட்சம் செலவில் பல்நோக்கு கட்டிடம்!

## திருமதி தமிழரசி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

*சிவகங்கை, ஆக. 25 -*

சிவகங்கை மாவட்டம் சாலை கிராமத்தில் சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 30 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பல் நோக்குஅரங்கத்தினை திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ. திறந்துவைத்து சிறப்புரையாற் றினார் .இதே போல் ஆழிமதுரை கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று புதிதாக அமைக்கப்பட்ட மின்மாற்றியினை பொது மக்களுக்கு அர்ப்பணித்தார். இந்த நிகழ்ச்சியில் முன்னால் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், கூட்டுறவு சங்கத்தலைவர் சுப.தமிழரசன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆறு.செல்வராசன், வே.தமிழ்மாறன். நிர்வாகிகள் குழந்தை பாண்டியன், ராஜபாண்டி, சிவனேசன், விவசாய அணி காளிமுத்து, நீலமேகம், ஊராட்சி மன்ற தலைவர்கள் சுசிலா நாடிமுத்து, குழந்தை பாண்டியன், தொண்டரணி புலிக்குட்டி, பெஞ்சமின், அற்புதம், ஆறுமுகம் மலைச்சாமி, வே.கருணாகரன் ஒன்றிய கவுன்சிலர்கள் சாத்தையா செல்வி, மகாலிங்கம், பூமிநாதன், தகவல் தொழில் நுட்ப அணி கண்ணன், ஒன்றிய ஆணையாளர் விஜயகுமார், மின்வாரிய அதிகாரிகள் உட்பட கிராமமக்கள் கலந்து கொண்டார்கள்.



விருதுநகரில் தி.மு.க. இளைஞரணி நடத்தும் "என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை மாவட்ட செயலாளர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் நிதி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைத்து வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் நடுவர்களாக கம்பம் செல்வேந்திரன், இரா உமா, சேலம் ஜிஜாதா, ஓடி காமராஜ், சூர்யா சேவியர், மகிழ்நன் பங்கேற்றனர். வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கிருஷ்ணகுமார், தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தனுஷ் குமார், துணை அமைப்பாளர்கள் ஜெகன், பால் பண்டியன், சிதம்பர பாரதி, திலீபன், மஞ்சுநாத் அய்யனார், பாபுஜி, தனுஷ் குமார், தங்கம், ரவி கண்ணன், கார்த்திகேயன், பாசறை ஆனந்த், வெம்பக்கோட்டை கார்த்தி மற்றும் கழக நிர்வாகிகள், மாணவ மாணவிகள் திரளாக கலந்து கொண்டனர்.





கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், பள்ளத்தூர் முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் 23.08.2024 அன்று , நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அரசுடன் இணைந்து தனியார் பங்களிப்புடன் கட்டப்பட்டுள்ள அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை கட்டிடம் மற்றும் ஆய்வகம் உள்ளிட்டவைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தலைமையில், பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் (பொ) மரு.ஜி.பிரியதர்ஷினி, பள்ளத்தூர் பேரூராட்சி தலைவர் திருமதி சாந்தி சங்கர், அருண் (சாரிட்டபிள் டிரஸ்ட்), AMPL வள்ளியம்மை ஆச்சி குடும்பத்தார்கள், ஜவஹர் அவர்களின் குடும்பத்தார்கள், நாச்சியப்பன் அவர்களின் குடும்பத்தார்கள், பள்ளத்தூர் பேரூராட்சி துணைத்தலைவர் திருமதி ராம.ருக்மணி, 12வது வார்டு உறுப்பினர் சோ.சோலைமலை, மருத்துவ நிலை அலுவலர் மரு.வள்ளியம்மை உட்பட பலர் உள்ளனர்.